சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 33/2026**

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **மீனாட்சி PW1** வாக்குமூலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்**., சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **மீனாட்சி** | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

19.06.2026

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துதான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். 17.05.1977 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 25.06.2019 தேதியிட்ட கூட்டுப்பட்டா எண்.2484 இணையதளநகல் **வா.சா.ஆ.2** ஆகும். 31.08.2025 தேதியிட்ட பட்டா எண்.327 இணையதள நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 31.08.2025 புல எண்.206/8ஏக்குரிய வரைபடம் இணையதள நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 31.08.2025 புல எண்.206/8பி 1–க்குரிய வரைபடம் இணையதள நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

31.08.2025 புல எண்.206/8பி-2 க்குரிய வரைபடம் இணையதள நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 15.04.2025 தேதியில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 07.01.2026 தேதியிட்ட 3ம் வாதிதரப்பு பதில் அறிவிப்பு (3 ரசீதுகள்) **வா.சா.ஆ.8** ஆகும். 09.01.2026 தேதியிட்ட 1ம் வாதி பதில் அறிவிப்பை பெற்ற ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.9** ஆகும். வாதிகளின் ஆதார் அட்டை எண்ணிக்கை - 3 நகல் **வா.சா.ஆ.10** ஆகும். 11.02.2020 தேதியிட்ட 1ம் வாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது அசல் **வா.சா.ஆ.11** ஆகும். 11.02.2020 தேதியிட்ட 2ம் வாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது அசல் **வா.சா.ஆ.12** ஆகும். தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் **வா.சா.ஆ.13** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.